REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 181

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F

சென்னை : மார்கழி 3உ வெள்ளி (18—12—53) ★ ★ ★ வெளியூர் : மார்கழி 4உ சனி (19—12—53)

'சர்' பட்டத்திற்கு ஈடாக 'பாரத ரத்னா!'

—(0)—

'திவான் பகதூர்'க்குப் பதிலாக 'பத்ம விபூஷணா!'

விடுதலை பெற்ற இந்தியத் துணைக் கண்டத்தின் விசித்திரப் போக்கு!

பட்டத்திற்கு அலையும் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் அவலட்சணம் அம்பலம்!

புதுடில்லி, டிச. 17—

தங்களுக்கு உடந்தையாக இருந்தவர்களுக்குப் பட்டம், பதவி கொடுத்து, ஆங்கில ஆட்சியாளர்கள் தங்களுக்கு ஆதரவு திரட்டி வந்தார்கள். அதே முறையை காங்கிரஸ் ஆட்சியாளர்களும் பின்பற்ற ஆசை கொண்டுள்ளனர்.

காங்கிரஸ் சர்க்காருக்குப் பின்பாட்டுப் பாடுகிறவர்களுக்கு ஏதாவது பட்டம், பதவி கொடுத்து, மற்றவர்களையும் பின்பாட்டுப் பாடத் தூண்டலாமா என்று, யூனியன் சர்க்கார் யோசித்துக் கொண்டு இருக்கிறதாகத் தெரிகிறது.

சர்க்கார் உத்தியோகம், வெளிநாட்டுத் தூதுவர், அரசியல் ஆகிய துறைகளில் சிறந்த பணிபுரிந்தவர்களுக்கு 'பாரத ரத்னா' என்று பட்டம் சூட்டுவது என்றும், இந்தப் பட்டத்திற்குப் பெருமை உண்டாக்க, இதை ஆண்டு ஒன்றுக்கு நான்கே நான்கு பேர்களுக்குத்தான் அளிக்க வேண்டுமெனக் கட்டுப்படுத்துவதென்றும், யூனியன் சர்க்கார் தீவிரமாக யோசித்து வருகிறதாகச் சொல்லப்படுகிறது.

கலை, இலக்கியம், திறமை ஆகிய வகையில் சிறந்து விளங்குகிறவர்களுக்கு, 'பத்ம விபூஷணா' என்று பட்டம் அளிப்பது என்றும் சர்க்கார் யோசித்து வருகிறது.

வெள்ளையர் கொடுத்த 'சர்', 'திவான் பகதூர்' ஆகிய பட்டங்களை எப்படி, பெற்றுக் கொண்டவர்கள், தங்கள் தங்கள் பெயர்களுக்கு முன்னால் சூட்டிக் கொண்டார்களோ. அதேபோல்தான், இவைகளையும் சூட்டிக்கொள்ள வேண்டும்

அவசியமானால் இடத்தின் பெயர்களை மாற்றலாம்

யூனியன் சர்க்காரின் சுற்றறிக்கை

புதுடில்லி, டிச. 18—

"மாற்றியேதான் ஆகவேண்டும் என்பதற்கான அவசியமும், தக்க காரணங்களும் இருந்தால் தவிர, இடங்களின் பழைய பெயர்களை இப்போது மாற்ற வேண்டாம்," என்று, எல்லா மாநில சர்க்கார்களுக்கும் இந்திய சர்க்கார் அறிவித்துள்ளது.

"இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து, சில நகரங்கள், கிராமங்கள், தெருக்கள், பார்க்குகள் இவைகளின் பெயர்களை மாற்றி, புதுப் பெயர் வைக்க வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டு வந்திருக்கிறது. சிலவற்றின் பெயர்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன."

பர்மாவிலுள்ள இந்தியர் நிலங்கள்

30-லட்சம் ஏகரா சர்க்கார் கைப்பற்றும்!

கல்கத்தா, டிச 16—

பர்மாவில், 30 லட்சம் ஏகருள்ள இந்தியர் நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமுன் நியாயமான நஷ்டஈடு தரப்படுவது குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்த மீர்சா நிஸ்மையல், எம். எம். முருகப்ப செட்டியார் இவர்கள் கொண்ட ஒரு தூது கோஷ்டி ரங்கூனுக்கு புறப்படுவதாக இருந்தது; ஆனால் மீர்சர் இஸ்மையல் உடல் அசௌக்யம் காரணமாக இந்தப் பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

* * *

பம்பாய், டிச 18—

பர்மாவில் வேலை செய்த சுமார் 3,000 இந்தியர்கள் மறுப் போட்டுள்ளதாக புதுடில்லி பர்மிய ஸ்தானிகாலயம் அறிவிக்கிறது.

"திராவிட நாடு என்று கூறுக!"

—[0]—

"எஞ்சிய மாநிலமென்பது கூடாது"

சென்னை சட்டசபைக் கூட்டத்தில் உறுப்பினர்களின் உரிமைக் குரல்!

சென்னை, டிச. 17—

சென்னை சர்க்காரின் 1953—54-ம் ஆண்டு, பின் ஆறு மாத கால வரவு-செலவு மீது நடந்த சட்டசபையில் விவாதம் ஆரம்பமாயிற்று. சபாநாயகர் சிவஷண்முகம் தலைமை வகித்தார்.

நெருக்கடி!

முதன் முதலில் தோழர் கே. டி. ராஜு பேசியதாவது :—

"நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றியும், சிறிய சுதேசித் தொழில்கள் நாட்டில் அழிந்து வருவது பற்றியும், நிதி அமைச்சர் குறிப்பிடவில்லை; உண்மையில், இம்மாநிலத்தில், நெருக்கடி ஏற்பட்டு வருகிறது."

ஏகபோகம்!

அடுத்து தோழர் இராகவ முதலியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அமைச்சரின் பேச்சு வெறும் மகட்டாக இருக்கிறது. விலைகள் சரிந்து, விவசாயச் செலவு குறையாதிருப்பது மோசமான நிலையை ஏற்படுத்தும்; விறகு விலை செயற்கையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காடுகளில் 'பர்மிட்' வழங்கும் முறையைச் சரிப்படுத்தி, மாமூல் முறையைப் போக்க வேண்டும்."

"கடந்த ஓராண்டாக, ஒரு வகுப்பு, கசப்பு—வெறுப்பு நாட்டில் இருந்து வருகிறது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை எடுத்துவிட்டதால், இது ஏற்பட்டிருக்கிறது; கொள்ளையிலே, லாபத்திலே பங்கு கொள்வது பற்றி, ஆச்சாரியார் வெளியிட்ட அறிக்கையும் ஒரு காரணமாகும். ஒரு வகுப்பார் எல்லாவற்றையும் ஏகபோகமாக அனுபவிப்பதென்பதில்லாமல், எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் கிடைக்குமாறு வகுப்புவாரி முறையை மீண்டும் கொண்டு வரச் செய்வது அவசியமென்று, மத்திய சர்க்காருக்கு மாநிலசர்க்கார் சிபார்சு செய்யவேண்டும்; இதனால், வகுப்பு வெறுப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

'சர்வாதிகார ஆட்சி! பேயாட்சி!'

'ஜாதி வெறியை ஆச்சாரியார் முதலில் விட்டொழிக்க வேண்டும்!'

'கல்வித் திட்டத்தை பிரச்னையாக வைத்து, சி. ஆர். தேர்தலில் போட்டியிட்டால் சாதாரண நபர்கூட அவரைத் தோற்கடித்துவிடுவார்'

சென்னை சட்ட சபையில் கோசல்ராம் தாக்குதல்

சென்னை, டிச. 18—

"நீதி விவகாரங்களிலும் ஆச்சாரியார் குறுக்கிட்டு, பட்சபாதமாக நடக்கிறார்; அவர், ஜாதி-வெறியுடன் நடக்கிறார்; ஜாதிகள் ஒழிய வேண்டுமென்று கூறும் ஆச்சாரியார், முதலில், ஜாதி வெறியை விடவேண்டும்; அவரது ஆட்சியில், ஜாதி வெறியும், லஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன; இதுபற்றி கமிட்டி நிறுவி விசாரிக்கலாம்."

"புது கல்வித் திட்டத்தைத் தூக்கி எறியவேண்டும்; அதற்கு மக்களின் ஆதரவு இல்லை; இத்திட்டத்தைத் தேர்தல் பிரச்சினையாக வைத்து, தேர்தல் நடத்திப் பார்க்கலாமென்று நான் அறைகூவல் விடுக்கிறேன்; தேர்தலில், புதுக்கல்வித் திட்டத்தை ஆதரித்து நிற்பவர்கள் டெபாசிட்டை இழக்கவே நேரிடும்; ஆச்சாரியார் வேண்டுமானால் நின்று பார்க்கட்டும்; சர்வ சாதாரண நபரே ஆச்சாரியாரைத் தோற்கடித்துவிடக்கூடும்."

"அரசியல் திட்டத்தைத் திருத்துவது சம்பந்தமாக மாநில சர்க்கார்களின் யோசனையை, மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறது; இந்த மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பார் நலனுக்கு ஏற்ப அரசியல் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்."

—என்று, நேற்று கூடிய அசெம்பிளியில், மாநில சர்க்காரின் 1953—54-ம் ஆண்டின், பின் 6 மாதகால வரவு-செலவுத் திட்டத்தின் விவாதத்தின்போது பேசிய தோழர் டி. கோசல்ராம் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "ஆச்சாரியாரின் ஆட்சி, சர்வாதிகார ஆட்சி! பேயாட்சி!' என்று கண்டித்தார். அவருடைய சர்வாதிகாரப் போக்கால், சென்னை மாநிலத்திற்கு ரூ. 3 கோடி 75 லட்சம் கிடைக்காமல் போனதையும் குறிப்பிட்டார். தொடர்ந்து, அவர் பேசியதாவது:—

"சென்ற ஜூன் மாதத்தில் இது நடந்தது; அப்போது, நேரு மாதத்திற்கு ஒரு கோடி ரூபாய் தருவதாகவும், திட்டம் தரும்படியும்

(4-ம் பக்கம் பார்க்க)

கடன் நிவாரணச் சட்டம்

'விவசாயிகள் நலனுக்கு வழிகோல வேண்டும்"

சென்னை சட்டசபையில் கோரிக்கை

★

சென்னை, டிச. 17—

சென்னை சர்க்காரின் 6 மாத வரவு—செலவுத் திட்டத்தின் மீது, நேற்று சட்ட சபையில் விவாதம் நடைபெற்றது. அப்போது, வேடசந்தூர் தோழர் மதனகோபால் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"விவசாயிகள், தங்கள் கடனைத் திருப்பி கொடுப்பதற்காக சர்க்கார் வழி செய்யாவிட்டால், கடன் நிவாரணச் சட்டத்தால் விவசாயிகளுக்கு பலன் கிடைக்காது" என்று கூறினார். மேலும் அவர் பேசுகையில், 'ஆச்சாரியார் ஆட்சி ஜாதி வெறி ஆட்சி' என் [illegible]

நம் நாடு
கழகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—12—53 வெள்ளி

பொருந்தாப்பொய்யுரை!

[2]

திரிசிரபுரத்திற்கும், விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள 'டால்மியாபுரம்' என்று வழங்கப்பட்டுவரும் புகைவண்டி நிலையப் பெயரை, அங்குள்ள சிற்றூரான 'கல்லக்குடி' என்ற பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது தி. மு. கழக அறப்போராட்டத்தின் அடிப்படை கோரிக்கை. இந்தக் கோரிக்கையைத்தான் பல ஆட்சி மன்றங்கள் தீர்மானமூலமாக வலியுறுத்தியுள்ளன. இந்த அடிப்படையை அறியாதவர் போலவும், மறந்தவர் போலவும் நிலவரி அமைச்சர் கனம் மாணிக்கவேலர், கல்லக்குடி என்னும் தெய்ஞ்ஞூ கிராமத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் உள்ள 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்ற வேண்டுமென்றுகூட சிலர் கூறியுள்ளார்கள் என்று கூறி, அதற்குச் சமாதானமும் கூறியுள்ளதைக் குறித்து நேற்று விளக்கமாக எழுதியிருந்தோம். இன்றும் அதைத் தொடர்ந்தே சில எழுதுகிறோம்,

பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர், ரயில்வே அமைச்சரான லால்பகதூர் சாஸ்திரியை ஆகஸ்டு திங்களில் நேரில் சந்தித்து, இந்தப் பிரச்னையைக் குறித்து மனுவொன்றைக் கொடுத்தார்கள். அதற்கு, அந்த அமைச்சர் சென்னை சர்க்காரின் கருத்தறிந்து பிரச்னையைக் கவனிப்பதாகக் கூறினார். கல்லக்குடி எனப் பெயர் மாற்றுவது பற்றி, சென்னை சர்க்காரின் கருத்தைக் கேட்டிருப்பதாகவும் அதே அமைச்சர் பின்னர் குறிப்பிட்டும் உள்ளார். இவ்வளவும் செய்தியாக அப்பொழுது வெளிவந்து இருக்கிறது.

இதுபற்றின கேள்விக்கு நிலவரி அமைச்சர் கனம் மாணிக்கவேலர் பதில் கூறும் பொழுது, பெயர் மாற்றம் பற்றிய சென்னை சர்க்காரின் கருத்தை, யூனியன் சர்க்கார் இதுவரை கேட்கவில்லை என்றும், சென்னை சர்க்காரும் பதில் ஒன்றும் சொல்லவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யூனியன் அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியோ சென்னை சர்க்காரின் கருத்தைக் கேட்டிருப்பதாகக் கூறுகிறார். சென்னை அமைச்சரோ அப்படி ஒன்றும் கேட்கவில்லை என்று சொல்லுகிறார். இந்த இருவர் கூற்றிலும், எது பொய், எது மெய் என்று ஆராய வேண்டியதாக இருக்கிறது.

யூனியன் அமைச்சரைக் கண்டு, கோரிக்கையை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம், சென்னை சர்க்காரைக் கேட்டறிய வேண்டும் என்ற நினைப்பில்தான், சென்னை சர்க்காரின் கருத்தறிவதாக, அவர் வாக்குறுதி யளித்தார். அப்படி வாக்குறுதி அளித்தவர் அதை நிறைவேற்றத் தவறிவிட்டாரோ, தள்ளிப்போட்டாரோ. காரணமே இல்லை, பெயர் மாற்றப் பிரச்னை குறித்து, தனது கருத்தைத் தெரிவிக்குமாறு சென்னை சர்க்காருக்கு யூனியன் அமைச்சர் எழுதித்தான் இருக்க வேண்டும் என்பது நம்மக் கூடியதேயாகும்.

ஒரு விஷயத்தில், சாதகமாகவோ பாதகமாகவோ, முடிவு எடுப்பதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், குறிப்பிட்ட விவகாரத்தின் உள்ளும் புறமும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவாவது, யூனியன் ரயில்வே அமைச்சர், கல்லக்குடி பெயர் மாற்ற விஷயத்தைப் பற்றி, சென்னை சர்க்காரின் கருத்தைக் கூறுமாறு, கட்டாயம் கேட்டுத்தான் இருக்கிறார் என்பது பொய்யல்ல.

இடபொழுது சென்னை சர்க்கார் சார்பில் கூறப்படுகிற பதிலையே, ரயில்வே அமைச்சர், கோரிக்கையாளர்களான பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறுவதை, எதுவும் குறுக்கே இருந்து தடுத்துவிடப் போவதில்லை. எனவே எந்த நியாயத்தைக் கொண்டு பார்த்தாலும், இந்தப் பெயர் மாற்ற விவகாரத்தில் யூனியன் அமைச்சர் பொய் சொல்ல வேண்டிய அவசியத்தில் இல்லை என்ற முடிவிற்கே நாம் வர வேண்டியதாக இருக்கிறது.

இது விஷயத்தில் யூனியன் அமைச்சர் உண்மையைத் தான் கூறி இருக்கிறார் என்றால், பொய் கூறி உண்மை நிலையை மறைப்பவர் சென்னை அமைச்சராகத்தான் இருக்க வேண்டும். ஏன், உண்மையை மறைத்துப் பேசும்—அதுவும் இந்த சாதாரணமான விஷயத்தில்—நிலையை கனம் மாணிக்கவேலர் பெற்றாரோ, நமக்குப் புலனாகவில்லை!

அமைச்சர் ஆச்சாரியாரும் இதுபற்றி விளக்கம் கொடுத்திருக்கிறார். நிலவரி அமைச்சர் கூற்றுகள் அனைத்தையும் ஆதரித்த அவர், சென்னை சர்க்கார் கருத்தை, யூனியன் சர்க்கார் கேட்டதா இல்லையா என்பதை மட்டும் தொட்டுக் கொள்ளாமலே மழுப்பலாக விட்டுவிட்டார். மாணிக்கவேலரின் மற்றக் கூற்றுகளை ஆதரித்த ஆச்சாரியார், இந்த ஒன்றில் மட்டும் தலையிடாது விட்டு விட்டதிலிருந்தே, சென்னை சர்க்கார் கருத்தை யூனியன் சர்க்கார் எழுதிக் கேட்டிருக்கிறது என்பது வெட்டவெளிச்சமாகிறது.

உண்மை இவ்வாறு இருந்த காரணத்தால்தான், நிலவரி அமைச்சுறை மற்றத் துறைகளில் ஆதரிக்க முன்வந்தவர், குறிப்பிட்ட இத்துறையில் மௌனமாக இருந்து விட்டார் என்று தெரிகிறது. இத்துறையில், ஆச்சாரியார் சாதித்த மௌனத்திற்கு வேறு நியாயமிருப்பதாகக் கூறுவதற்கில்லை. எனவே, கல்லக்குடி பெயர் மாற்றுவது பற்றிய தனது கருத்தைத் தெரிவிக்குமாறு, சென்னை சர்க்காருக்கு, யூனியன் சர்க்கார் எழுதியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகிறது. இந்த உண்மையை நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் மறைக்கிறார் என்பது உறுதி. இந்த அற்பத்திற்கும் பொய்யையே துணையாகக் கொள்ளுகிற நிலவரி அமைச்சரின் செயலுக்கு நாம் இரங்குகிறோம்! நிற்க,

பெயர் மாற்றம் பற்றி, அதேநாளில் அமைச்சர் ஆச்சாரியாரும் பெயர் வந்த கதையைப் பற்றிக் கூறியிருக்கிறார். 'இது அவசியமற்றது என்று என் கருத்தில் படுகிறது. அப்பொழுதே கிராமத்தின் பெயரையே சூட்டியிருந்தால், இந்தத் தொல்லைகள் அனைத்தையும் நேராமல் தவிர்த்திருக்கலாம்,'' என்று அவர் மேலும் கூறியிருக்கிறார்

எந்தக் கிராமத்தின் பகுதியில் புகைவண்டி நிலையம் இருக்கிறதோ, அதே கிராமத்தின் பெயரைத்தான் அப்புகைவண்டி நிலையத்திற்கு இட வேண்டியது நியாயம் என்பதை அமைச்சர் ஆச்சாரியார் ஒப்புகிறார் என்பதைத்தான், அவர் பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

குறிப்பிட்ட புகைவண்டி நிலையத்திற்கு, 'கல்லக்குடி' என்று பெயரிடாமல், 'டால்மியாபுரம்' என்று பெயரிட்டது, அக்கிரமமானது அல்லது பொருத்தமற்றது அல்லது அநீதியானது என்று அமைச்சர் ஆச்சாரியார் கொண்டிருக்கிறார் என்பது, அவர் கூற்றிலிருந்தே விளக்கமாகிறது. ஆனால், அந்த நியாய புத்தி, ஆச்சாரியாரைவிட்டு, மின்னொளிபோல், தோன்றிய உடனே மறைந்தும் விடுகிறது.

அடுத்த விநாடியே அவர் கூறுகிறார், 'அன்று பெயர் வைத்ததும் அவசியமற்றது—அதை மாற்ற இன்று முயற்சிப்பதும் அவசியமற்றது' என்று. அமைச்சர் ஆச்சாரியார் அநீதிக்கு வக்காலத்து வாங்கிப் பேசக் கிளம்புகிறார். விந்தையான மனிதர்!

ஏற்கெனவே பெயர் வைத்ததை நியாயம் என்று ஆச்சாரியார் சொல்லிவிட்டு இருந்தால், ஒருவரும் அதைப் பற்றிக் கவனம் செலுத்தமாட்டார்கள். கல்லக்குடி என்றுதான் பெயர் இடுவது நியாயம் டால்மியாபுரம் எனப் பெயரிட்டது அநியாயம் என்று சொல்லிவிட்டு, அந்த அநியாயத்தை நீக்க முயற்சிப்பது அவசியமற்றது என்று சொல்லுவது முரண்பாடு உடையதாகும்.

'வெள்ளையர்கள் இந்தியாவை ஆளுவது அநியாயம்' என்று சொல்லிவிட்டு, அடுத்த மூச்சிலேயே 'அவர்களை வெளியேறச் சொல்லுவது அவசியமற்றது' என்று கூறினால், அது எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்க முடியுமோ, அதே பொருத்தம் கொண்டதாகத்தான் இருக்கிறது அமைச்சர் ஆச்சாரியாரின் அளப்பும்! நிற்க,

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர் கட்சித் தலைவரும் தனது நோக்கையும், போக்கையும் காட்டக் கிளம்பி இருக்கிறார். "'காலாடிபெட்', 'பார்பர்ஸ் பிரிட்ஜ்', 'ஆர்மிபெட்' முதலிய நெஞ்சை உறுத்தும் அன்னியர் பெயர்களையும் நீக்க சர்க்கார் உத்தேசித்து இருக்கிறதா''. என்று கேள்வியைக் கிளப்பி இருக்கிறார்.

'அன்னியர்' பெயர்கள் நெஞ்சை உறுத்தக் கூடியன வாகும்' என்றுச் சுட்டிக் காட்டுவதின் மூலம் எதிர்க் கட்சித் தலைவர், 'டால்மியாபுரம்' என்ற புகைவண்டி நிலையப் பெயரில் நமக்குள்ள 'நெஞ்சப் புண்ணை' ஒப்புக் கொண்டதற்காக நாம் மகிழ்ச்சிப் பெறுகிறோம். 'அன்னியர்' யார் என்று கொள்ளுவதில்தான் மாறுபாடு இருக்கிறது.

'ஆர்மிபெட்,' 'காலாடிபெட்' என்ற 'அன்னியர்' பெயர்களைக்கேட்டு அவருக்கு நெஞ்சுப் புண்படுமே உண்டாகிறது, உடன் மறைந்தும் விடுகிறது. ஆனால், நமக்கோ, 'டால்மியாபுரம்' என்ற பெயர் கண்டு உண்டான நெஞ்சுப்புண் ஆறாமல் இருக்கிறது. இதுதான் நமக்கு உண்டான நெஞ்சு வலிக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கு உண்டாவதாகச் சொல்லப்படும் நெஞ்சு உறுத்தலுக்கும் உள்ள வித்தியாசம்!

நாம் விளங்கிக் கொண்டுள்ளபடி, ஒரு 'அன்னியரி'ன் பெயரான டால்மியாவின் பெயரை, நியாயத்திற்கும், வழக்கத்திற்கும் மாறாக, கல்லக்குடி புகைவண்டி நிலையத்திற்குச் சூட்டி இருப்பதை உடனடியாக மாற்றி அமைக்க ஆச்சாரியார் சர்க்கார் முனைய வேண்டும்.

'ஜார்ஜ் டவுன்' போன்றது, வரலாற்றுத் தொடர்புடையது என்றும், பெயர் மாற்றத்திற்கு ஒரு [illegible] சமாதானத்தையும் அமைச்சர் ஆச்சாரியார் சொல்லுகிறார். இது, வெறும் ஊற்றுக்கு நிற்காத வாதம்.

'பான்குவெட்டிங் ஹால்' என்று இருந்த வரலாற்றுத் தொடர்புடைய மாளிகையை, 'ராஜாஜி மாளிகை' என்று மாற்றிவிடவில்லையா? 'சைனா பஜார்' என்ற பெருஞ் சாலையை, 'சுபாஷ் சந்திர போஸ் ரோட்' என்று மாற்றிப் பெயரிடவில்லையா?

அவைகளிலெல்லாம் மறைந்து போகாத வரலாறு, வரலாற்றுக்குத் துளியும் தொடர்பில்லாத டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை, தாமே 'கல்லக்குடி என்று பெயரிட்டிருக்க வேண்டியதுதான் முறை' என்று ஒப்புக்கொண்டுள்ளது போல, மாற்றிவிடுவதால், கெட்டுப் போவதும் ஒன்றும் கிடையாது.

எனவே, அமைச்சர் ஆச்சாரியார், இந்தப் பெயர் மாற்ற விவகாரத்திலாவது நியாய புத்தியோடு நடப்பார் என்று எதிர்பார்ப்போமாக!

இந்தியா-ருஷ்யா இராணுவ பேரம்

டில்லி மறுப்பு

புதுடெல்லி, டிச 16—

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தளவாடங்கள் கொடுத்தால், இந்தியாவுக்கு ருஷ்யாவும் தளவாடங்கள் விற்கத் தயார் என்று டில்லியில் உள்ள ருஷ்ய [illegible] கர் கூறியதாக அமெரிக்க செய்தி ஸ்தாபனம் ஒன்று வெளியிட்ட தகவலை இந்திய அரசாங்க அதிகாரி ஒருவர் இன்று மறுத்தார். அது ஆதாரமே இல்லாத செய்தி என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க, ஜப்பானியப் பத்திரிகைகள் இந்த ஆதாரமற்ற செய்தியைப் பிரசுரித்துள்ளன.

குழாய்க் கிணறுகள்

டில்லி தரும் விளக்கம்

புதுடெல்லி, டிச 16—

அடுத்த மூன்று ஆண்டுகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக சர்க்கார் 24 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை வார்த்தைப்படுத்தும் வகையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கை யில் எம் வி கிருஷ்ணப்பா மக்கள் சபையில் கூறினார்.

உற்பத்திக் கிணறுகள் 2,650-ம், சோதனைக் கிணறுகள் 350-ம், அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்திக் கிணறுகள் உ. பி, பஞ்சாப், பீகார், பெப்சு ஆகிய மாநிலங்களிலும், சோதனைக் கிணறுகள் சென்னை, பம்பாய், மைசூர், ஒரிசா, திருவாங்கூர் ஆகிய மாநிலங்களிலும் அமைக்கப்படும்.

உற்பத்திக் கிணறுகள் வேலையை மாநில அரசுகள் மேற்பார்க்க வேண்டும்; அதற்கான செலவைப் பகுதிய அரசாங்கம் கொடுக்கும்; சோதனைக் கிணறுகள், உணவு விவசாய அமைச்சகத்தின் மேற்பார்வையில் [illegible]களால் கட்டப்படும்.

குடிகாரச் சீமான்கள்

20 மாதத்தில் வாங்கியுள்ள மது வகைகள்

புதுடெல்லி, டிச 16—

சென்னை மாநிலத்திலுள்ள பணக்கார குடிகாரர்கள் கடந்த 20 மாதங்களில் ரூ. 2,08,695 மதிப்புள்ள மேல் நாட்டு மது வகைகளை வாங்கியுள்ளனர்.

இத்தகவல் டெல்லி சட்டசபையில் வெளியிடப்பட்டது.

சுபாஷ் மகளுக்கு 2 லட்ச ரூபாய்

காரியக் கமிட்டி முடிவு

கல்கத்தா, டிச. 16—

இந்திய தேசிய இராணுவ நிதியிலிருந்து சுபாஷ் சந்திரபோஸின் 11 வயது புதல்விக்கு, 2-லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிடமிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகம்

பம்பாய், டிச. 14—

தாராவி, தி. மு. கழக செயல்வாரக் குழு கூட்டம் 14-12-53ல் தோழர் எஸ். பி பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். எஸ். இளங்கோ அவர்களால் கொண்டு நடத்திய கொலபா தி மு கழக திறப்பு விழா வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஏ. எஸ். அன்பரசு, கு. தங்கவேலன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கருப்பையா கொலை வழக்கு விசாரணை

மதுரை, டிச. 15—

கருப்பையா கொலை சம்பந்தமாகப் பூக்கடைப் பாண்டி என்பவர்மீது போலீசாரால் தொடரப்பட்ட கொலை வழக்கு, 9—12—53-ல், தாலுகா மாஜிஸ்திரேட் திரு சி. இராமனுஜம் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் கருப்பையாவின் சகோதரர் எம். ஓ. கந்தன், அரசாங்கத் தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். மற்றும் தங்கவேலு, தியாகராசன், கிருஷ்ணசாமித் தேவர், மாலை அம்மாள் ஆகியோர் இன்று அரசாங்கத் தரப்பில் சாட்சியமளித்தனர்.

2-வது சாட்சி

அரசாங்கத் தரப்பில் இரண்டாவதாக சாட்சியமளித்த தங்கவேலு கூறியதாவது:—

"கடந்த 5—10—53-ம் தேதியன்று கந்தனுடைய கடைக்கு நான் சென்றிருந்தேன்; அப்போது கருப்பையா கடைக்குள் உட்கார்ந்து அணிகளைத் தைத்துக்கொண்டிருந்தார்; கருப்பையாவின் அண்ணனாகிய கந்தனிடத்தில் நான் தைக்கக் கொடுத்திருந்த சட்டையை வாங்கிக்கொண்டு வரலாமென்று தான் சென்றேன்; நான் அங்கு நின்று கொண்டிருந்தபோது சுமார் நான்கு பேர் அரிவாளுடன் வந்து, கடையில் இருந்த கந்தனை வெட்டினார்கள்; நான் அவர்களைத் தடுத்தேன்; அப்படி வெட்டியவர்களில் பாண்டியும் ஒருவர்; அரிவாளுடன் வந்தவர்கள் கந்தனை வெட்டியதுடன் (கடைக்குள் நுழைந்து) கருப்பையாவையும் வெட்டினார்கள். வெட்டுப்பட்ட கருப்பையா கடையைவிட்டு இறங்கி, காக்காத் தோப்புத் தெருப் பக்கமாக ஓடினார்; அவருக்கு உடலில் பல இடங்களில் வெட்டுக் காயம் ஏற்பட்டிருந்ததனால், அவர் கீழே விழுந்து விட்டார்; கந்தன் அருகே உள்ள ஒரு கார் செட்டில் போய் நுழைந்து கொண்டார்; பின்னர், போலீஸ் லாரி வந்தது; அந்த லாரியில் கருப்பையா பாரதி, கந்தன் ஆகியோரை ஏற்றிக்கொண்டு அரசாங்க வைத்திய சாலைக்கு வந்தோம்; அங்கே மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஒரு வாக்கு மூலம் கொடுத்தோம்."

இந்த நேரத்தில் அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர் அந்த வாக்குமூலத்தைப் படித்துக் காட்டி, அதில் கையெழுத்துப் போட்டுள்ளதுதான் கருப்பையாவின் வாக்குமூலமா என்று கேட்டார். இதை எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு தர்மராஜ் எதிர்த்தார்.

"கையெழுத்தை மட்டும் காண்பிக்க வேண்டுமே தவிர, வாக்குமூலத்தைப் படித்துக் காட்டக்கூடாது," என்று அவர் குறிப்பிட்டார். மாஜிஸ்திரேட் இந்த எதிர்ப்பைத் தள்ளுபடி செய்தார்.

வைத்தியசாலையில் கொடுத்த வாக்குமூலத்தைச் சாட்சி அடையாளம் காட்டினார்.

குறுக்கு விசாரணை

சாட்சியை எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு. தர்மராஜ் சந்தோஷம் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:—

"கந்தனுடைய கடைக்குப் பக்கத்தில் சுமார் 10 வீடுகளுக்கு வடக்கே நான் குடியிருந்து வருகிறேன்; கடந்த 20 ஆண்டுகளாக நான் ஆலையில் வேலை பார்த்துக்கொண்டு வருகிறேன்; நான் இந்திய தேசிய தொழிற் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன்; எப்போதும் கந்தன் கடைக்குச் செல்வதில்லை; ஓய்வு கிடைக்கும்போது இரண்டு மூன்று நாட்களுக்கொருதடவை செல்லுவதுண்டு; நான் வைத்தியசாலையில் இருந்த சமயம் போலீசாரிடத்தில் எதிரியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; பாண்டி என் நண்பன்தான்; கந்தனுக்கு எத்தனை வெட்டுகள் விழுந்தன என்று கூற இயலாது; கடைக்கு முன்பு 3 பேர்கள் அரிவாளுடன் நின்று கொண்டார்கள்; ஒருவர் கடைக்குள் நுழைந்து, கருப்பையா பாரதியை வெட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்தும் ஊர்வலத்தில் பாண்டி, கொடி பிடித்துக் கொண்டு செல்வார். கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்த மூன்று பேர்கள், யாரையாவது வெட்டினார்களா என்பதும் எனக்குத் தெரியாது."

✶

3-வது சாட்சி

அடுத்தபடியாகக் கந்தனுடைய கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த 12 வயதுள்ள தியாகராசன், மூன்றாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அப்போது அவன் கூறியதாவது:—

"கந்தனுடைய கடையில் நான்கு மாதங்கள் நான் வேலை பார்த்தேன்; தற்சமயம் விலகி விட்டேன்; கடந்த 5-10-53-ம் தேதி, விளக்கு வைத்த நேரம், சுமார் 4 பேர்கள் அரிவாளுடன் வந்து கருப்பையாவையும், கந்தனையும் வெட்டினார்கள்; அவர்கள் சத்தம் போட்டுக்கொண்டு வெளியே ஓடினார்கள்; கருப்பையா காக்காத் தோப்புத் தெருப்பக்கமும், கந்தன் அடுத்துள்ள கார் நிறுத்துமிடத்திற்கும் ஓடினார்கள்; நான்கு பேர்கள் கருப்பையாவை விரட்டிக் கொண்டே ஓடினார்கள்; கருப்பையா, கந்தன் ஆகியோரை வெட்டியவர்களில் பாண்டியும் இருந்தார்."

குறுக்கு விசாரணை

சாட்சியை எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:-

"எனக்குச் சம்பளம் கிடையாது; சம்பவம் நடைபெற்ற பின்னர் ஒரு நாள் போலீசாருடன் சிறைக்குச் சென்று எதிரியை அடையாளம் காண்பித்தேன்; அது வரையிலும் என்னை யாரும் விசாரிக்கவில்லை; வைத்தியசாலைக்குச் செல்லுவதற்கு முன்பு எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை; சம்பவம் நடைபெற்றது முதல் கடைசி வரை போலீஸ் அதிகாரிகளை நான் பார்க்கவில்லை; சிறையில் மட்டும் காலை 11 மணிக்கு எதிரியை அடையாளம் காண்பித்தேன்"

4-வது சாட்சி

பின்னர் கந்தனுடையகடைக்கு அருகே உள்ள கார் செட்டின சொந்தக்காரர் தோழர் கிருஷ்ணத்தேவர் நான்காவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது;-

"சம்பவ தினத்தன்று மாலை 6½-மணி இருக்கும்; 'ஐயையோ வெட்டுகிறார்களே,' என்ற சத்தத்துடன் என்னுடைய கார் செட்டில் வந்து கந்தன் ஒளிந்தார்; நான் வெளியே பார்க்கும்போது அரிவாளுடன் நான்கு பேர்கள் இருப்பதைக் கண்டேன்; அப்புகளை எச்சரிக்குமாறு என்னுடைய கடையில் இருந்தவர்களிடம் கூறினேன்; அதற்குள்ளாக அவர்கள் ஓடிவிட்டார்கள்; பின்னால், போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள்."

எதிர் தரப்பு வழக்கறிஞர் இவரைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

கடைசியாகக் கந்தனுடைய கடைக்குப் பக்கத்தில் வெற்றிலை பாக்குக் கடை வைத்திருக்கும் மாலை அம்மாள் ஐந்தாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் கூறியதாவது:-

"சம்பவ தினத்தன்று நான் கடையில் உட்கார்ந்திருந்தேன்; 'ஐயோ, வெட்டுகிறார்களே,' என்ற சப்தத்தைக் கேட்டேன்; கந்தன் கார் செட் பக்கம் ஓடுவதைக் கண்டேன்; கருப்பையா வெட்டுப் பட்டிருப்பதைக் கண்டேன்; வேறு ஒன்றும் நான் பார்க்கவில்லை"

இவரையும் எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

9—12—53-ல், மீண்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்று நான்கு சாட்சிகள் அரசாங்கத் தரப்பில் விசாரிக்கப்பட்டனர். இதுவரை 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.

6-வது சாட்சி

கார் செட்டில் வேலை பார்க்கும் கன்னையா பிள்ளை இன்று 6-

(4-ம் பக்கம் பார்க்க)

வட்டமிடுகிறது வெண்புரு! வில்லை வளைக்கிறான் வேடன்

பாரிஸ், டிச. 15—

அட்லாண்டிக் ஒப்பந்தக் குழுவின் இராணுவ பலம் திருப்திகரமான வகையில் பெருகியிருப்பதாக, பிரதம தளபதி குருவென்தர் இன்று அட்லாண்டிக் மந்திரிகள் கவுன்சிலில் அறிவித்தார்.

இப்போது 40 டிவிஷன் துருப்புகள், 53 ரிசர்வ் டிவிஷன்கள், 5,000 விமானங்கள் இருப்பதாக அவர் சொன்னார்.

போதாததற்கு, ஜெர்மனியில் அமெரிக்க அணுக்குண்டு பீரங்கிப் பட்டாளம் ஒன்று இருக்கிறது. இந்தப் பீரங்கி 25,000 கெஜ தூரம் சிறு அணுக்குண்டுகளைச் சுடும். மேலும், 5 அணுக்குண்டு பீரங்கிப் பட்டாளம் விரைவில் மேற்கு ஐரோப்பா வந்து சேரும்.

1954-ல் படை பலத்தின் அளவை விரிவாக்குவதைவிட, தரத்தை உயர்த்துவதிலேயே கவனம் செலுத்தப்படும். மேலும் 300 விமானங்களைச் சேர்ப்பது தவிர, வேறு விஸ்தரிப்பு எதுவும் இருக்காது.

(அணு ஆராய்ச்சி மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்குத்தான் பயன்பட வேண்டும் என அண்மையில் ஐசன்ஹோவர் ஐ.நா. சபையில் பேசியது இங்கு நினைவுறுத்த வேண்டியதாகும்)

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியின் 20-வது ஆண்டு விழா டிசம்பர் 19-ம் தேதி கொண்டாடப்படவிருக்கிறது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

முன் (14—12—53) தொடர்ச்சி	7089—0—5
சிவகாசித் தோழர்கள் அபு, அன்புப் பழம், வேலாயுதம் ஆகியோர்	4—0—0
சிங்கம்பாறை மீ. தாமஸ்	2—0—0
அண்ணாமலைநகர் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் 21 பேர்	25—0—0
பாளையங்கோட்டை பொருநலச் செல்வன்	5—0—0
,, கோவலன்	1—0—0
,, சாமி, சுப்பையா, சுந்தரராமன், சுப்பையா, என். கே. சாமி, நெடுஞ்செழியதாசன், அந்தோணி, ராயப்பன், பாலு, ராமகிருஷ்ணன், சீனிவாசன், நாராயணன், அப்பாசாமி, சீதாராமன், துரைராஜ் ஆகியோர்	5—2—0
,, கா. வேலாயுதம்	1—0—0
திசையன்விளை எம். எஸ் அமீத்	2—0—0
,, ஏ புகாரி	1—8—0
,, என. ஏ. கனி, பி. சண்முகம்	1—8—0
சென்னை எஸ். அருணாசலம்	1—0—0
,, பி. சுந்தரராமன்	1—0—0
எண்ணூர் தி. மு. கழகம்	1—0—0
பாபநாசம் எம். மாணிக்கம்	1—0—0
திண்டுக்கல் சபாபதி, பெருமாள், விஜயன், முருகன், நாதன் ஆகியோர்	2—6—0
வத்தலகுண்டு எம். இருளப்பன்	1—0—0
இராவிபுதூர் சி மீனாட்சிநாதன், ப. முருகேசன், பூ. சொக்கலிங்கம், ஆகியோர்	3—0—0
கே. ராமலிங்கம்	1—0—0
திருச்சி டி. எம் கிருஷ்ணன், ஆர். தியாகராசன், ஏ. முருகையா. ஜோசப், சோட்டேஜான், ராமலிங்கம், பழனியப்பன், ராமன் ஆகியோர்	8—0—0
புளியங்குடி தி. மு. கழகம்	10—0—0
திருச்சி வடக்கலூர் எம். முத்து	1—0—0
,, வி. எஸ். பழனிமுத்து	2—0—6
,, ஜெகநாதன், பூமாலை	1—0—0
கோவை என். மணி	1—0—0
சென்னை பாஸ்கரன்	1—0—0
,, ஏ. தனபால்	1—0—0
ஏ. கோவிந்தசாமி எம் எல். ஏ மூலம்: சென்னை 23-வது வட்டம் ஆலையில் நடந்த மதியழகன் வரவேற்புப் பொதுக்கூட்ட வசூல்	43-13-10
சென்னை பக்கிங்காம மில் நூற்புப் பகுதித் தொழிலாளர்கள்	16—0—0
சென்னை சர்க்கார் மோட்டார் தொழிலாளர்கள் சார்பில்	8—0—0
திருச்சி 20-வது வட்டம் தி மு கழகம்	
,, ஜி. பாலகிருஷ்ணன்	2—0—0
,, கி. பிச்சை	2—0—0
,, வி. குப்புசாமி	1—0—0
,, எம். குப்புசாமி	1—0—0
,, என். சந்தானம்	1—4—0
,, ஓப். சலாவுதீன	1—0—0
,, என். தானுகிருஷ்ணன்	1—0—0
,, எம். எஸ். ஈஸ்வரன	1—0—0
,, எம். முத்து, என். விட்டோபா	1—0—0
,, ஏ மாணிக்கம்	1—0—0
,, சி. சுப்பையா	1—0—0
,, என் மருதை	1—0—0
,, என். சீனிவாசன்	1—0—0
,, ஏ. தர்மராசன்	1—0—0
,, ஆர். கோபாலகிருஷ்ணன்	1—0—0
,, எஸ். வெங்கடாசலம்	1—0—0
,, டி. எம். கோபாலகிருஷ்ணன்	1—0—0
,, மாரிமுத்து, வெங்கடேசன், அய்யாதுரை, அய்யாசாமி, எம். ஏ. ராசு, ராம், மூர்த்தி, அழகிரி, கணேசன், கந்தன்	4-12—0
சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் மஸ்டர் சபை தோழர்கள்:— என். தங்கவேல், ராமசாமி, செல்லமுத்து, தங்கராசு, மருதமுத்து, முத்து, வடிவேலு, மாணிக்கம், அண்ணாமலை, பரமசிவம், அப்புக்குட்டன், பெரியசாமி, ராமசாமி, ஆறுமுகம், மாணிக்கம், சுப்ரமணியன், வடிவேலு ஆகியோர்	9—8—0
சென்னை முத்தியால்பேட்டை தி. மு. கழக சார்பில் 6—12—53-ம் தேதி நடந்த கூட்டத்தில் உண்டியல் வசூல்	17—0—3
சென்னை முத்தியாலுப் பேட்டை தி மு. கழகம்	20—0—0
அருப்புக்கோட்டை பகுத்தறிவுப் படிப்பகம் எஸ். பி சாமி	6—8—0
சென்னை—3. வையாபுரி நாய்க்கர்	2—0—0
,, 39-வது வட்டம் சி. வீரமணி	5—0—0
கும்பகோணம் இளவரசன்	1—0—0
நடையனல்லூர் தி மு. கழகம்	15—0—0
பிள்ளையார்துறை தி. மு. கழகம் எம் எஸ். என். ராசன் மூலம் உண்டியல் வசூல்	4—4—0
சிறுதொண்டநல்லூர் அ. சிவசங்கரபாண்டியன்	1—0—0
சென்னை சர்க்கார் ஊழியர்கள் செங்குட்டுவன் மூலம்:—	
ராமச்சந்திரன்	1—8—0
இளங்கோ	1—2—0
அஞ்சாநெஞ்சன்	1—1—0
செங்குட்டுவன்	1—0—0
கண்ணன்	1—0—0
அழகிரி	1—0—0
சாமி	1—0—0
நாகரத்தினம்	1—0—0
பழனி	1—0—0
ராவணன	1—0—0
நடராசன்	1—0—0
கே. எம். கிருஷ்ணன்	1—0—0
அருணாசலம், செல்வராசு, தமிழரசு, குமரன், குமரேசன், சம்பந்தம், மணி, நாராயணசாமி, அருணகிரி, பலராமன், பழனி, அங்காளப்பன், நடராசன், எம். ஜோ. ராதாகிருஷ்ணன் பாலகிருஷ்ணன், மோகன், பத்மநாப நாயர், குப்புசாமி, சைமன், குப்புசாமி, கணேசன், முனுசாமி, வையாபுரி, ராகவன், கிருஷ்ணன், மூர்த்தி, மங்கையர்க்கரசி, செல்சன், மாணிக்கம் ஆகியோர்	11-12—0
சென்னை ஜிம்கானா கிளப் ஊழியர்கள்:-	
சி. எம். ராசரத்தினம	1—8—0
அப்பாவு	1—0—0
எம் குரப்ப ஆச்சாரி, வெங்கடேசன், குப்பமுகர், கோதண்டபாணி, சாமிநாதன், மூர்த்தி, பார்த்தசாரதி, சண்முகம், பாலகிருஷ்ணன் ஆகியோர்	2—2—0
ஆக மொத்தம் ரூ	7376-11—6
குறிப்பு: டிச 14-ம் தேதி இதழ்க் கணக்கில், பொள்ளாச்சி பொன்னன் முதலிய 15 தோழர்களால் கொடுக்கப்பட்ட 6 ரூ 8 ருபாயாகத் தவறுதலாக அச்சாகிவிட்ட வகையில் கழிவு	2—0—0
ஆக மொத்தம் ரூ.	7373-11—6

சர்வாதிகார ஆட்சி!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேட்டார். ஆனால், ஆச்சாரியார்தான் சர்வாதிகாரியாயிற்றே! 'நேரு, என்னைத் திட்டம் கேட்பதா, அவரிடம் நான் திட்டம் சமர்ப்பிப்பதா?' என்று சும்மாயிருந்து விட்டார். ரூ. 75 லட்சத்திற்கு மட்டுமே திட்டம் தரப்பட்டது. ஆச்சாரியார், சும்மாயிருந்ததால், இந்த ராஜ்யத்திற்கு ரூ. 3 கோடி 75 லட்சம் கிடைக்காமற் போய்விட்டது; இதைவிட இந்த மாநிலத்திற்கு வேறு கெடுதி உண்டா என்று நான் கேட்கிறேன்.

"காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள், கொள்ளையில் பங்கு கேட்பதாக, ஆச்சாரியார் விடுத்த அறிக்கையை நான் வன்மையுடன் கண்டிக்கிறேன். பங்கு போடுகிறவர் யார்? இதுவே என்னுடைய கடைசிப் பேச்சு; அதனால்தான் நான் இதையெல்லாம் கூறுகிறேன். காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் கொள்ளைக்காரர்கள் என்றால், அவர்களுக்குத் தலைமை வகிப்பவர் கொள்ளைத் தலைவரா? இல்லாவிட்டால், இதை நான் விரும்பவில்லை என்று அவ்வா ஆச்சாரியார் கூறிவிட்டு, ராஜினாமா செய்து வெளியேறியிருக்கவேண்டும். "கிடைக்கும் கொள்ளையில் உனக்குப் பங்கு இல்லை; என் மனிதர்களுக்கு மட்டுந்தான் என்ற முறையில், ஆச்சாரியார் நடக்கிறார். இந்நாட்டின் நிலைமையை, நாங்கள், உள்ளது உள்ளபடி காங்கிரஸ் தலைவர்களிடம் தெரிவித்தோம்; இதில் என்ன தவறு இருக்கிறது?

"தேர்தலுக்கு நிற்காமல், நியமனம் மூலம் உறுப்பினராவார் என்று தெரிந்திருந்தால், ஆச்சாரியாரை கட்சித் தலைவராக ஏற்றே இருக்க மாட்டோம்; அவர் பணத்தை விரயம் செய்கிறார். இரட்டைச் சம்பளம் வாங்குகிறார்.

கல்வித் திட்டம் பற்றி அவர் மீண்டும் குறிப்பிட்டு, "பாருலேகர் கமிட்டி சிபாரிசுகளை ஏற்று நடத்துவதானால் சரியென்றும், அதற்கு 10 கோடி ரூபாய் தேவையாகையால் அது சாத்தியமற்றதென்றும் ஆகவே, திட்டத்தை எடுத்துத்தான் ஆக வேண்டும்'' என்றும் எச்சரித்தார்.

"சாகும் வரையில் பட்டினியாம்!"

சென்னை, டிச. 16—

சென்னை சர்க்கார் ரெவின்யூ இலாகா, தன்னிடமிருந்து 6 ஏகரா நிலத்தை எடுத்துக்கொண்டுவிட்டதை ஆட்சேபித்து டி. பி. அர்த்தய ஷெட்டி என்பவர், சென்னை செக்ரடேரியட் முன்பு சாகும் வரை பட்டினியை மேற்கொண்டிருக்கிறார்; தன்னுடைய முடிவை காங்கிரஸ் தலைவர்களுக்கு இவர் அறிவித்துவிட்டாராம்!

இந்நிலத்தின் அபிவிருத்திக்காக, இவர், ரூ. 5,000 செலவிட்டிருப்பதாகக் கூறுகிறாராம்!

ஏமாற்றக் கூடாது!

"ஆளுக்கும் இடத்திற்குத் தகுந்தபடி கருத்தை மாற்றிக்கொண்டே போகக்கூடாது; செய்ய முடியாததைச் சொல்லி மக்களை ஏமாற்றக் கூடாது. மதத்தின் பேரால் பல நூற்றாண்டுகளாக மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர்; ஜனநாயகத்தின் பெயரால் மக்களை ஏமாற்றக் கூடாது."

—சென்னையில் படத் திறப்பு விழாவில் பி. டி. ராஜன்.

கழக கூட்டங்கள்

★

உடுமலைப்பேட்டை

20—12—53 ஞாயிறு மாலை
தலைவர்: லெ. காளியப்பன்
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்

★

நெல்லை தி. மா. மு. க.

20—12—53 ஞாயிறு மாலை
தலைவர்: ச. வீரபாகு
பேசுவோர்:
இரோ. இளம்வழுதி
மதுரை எஸ். முத்து

சென்னை மாவட்ட தி. மு. க. கமிட்டி கூட்டம்

சென்னை மாவட்ட தி. மு. கழக கமிட்டி கூட்டம் 20—12—53 ஞாயிறு மாலை 2 மணிக்கு இராயபுரம், 'அறிவகத்'தில் நடைபெறும்.

பொருள்:—மாவட்ட மாநாட்டு விபரம்; திராவிடர் திருநாள்.

எனவே, மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரும்படி சென்னை மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் கேட்டுக் கொள்ளுகிறார்.

19-வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம்

ஓட்டேரி 19-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ஏ. கே. சாமி இல்லத்தில் (பிரிக்லின் ரோடு) 20—12—53 காலை 9 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் புதிய செயலாளர் தேர்தல் நடைபெறும். இதையே அழைப்பாகக் கொண்டு எல்லாப் பொது உறுப்பினர்களையும் தவறாமல் வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் என்று, கா. ச. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகக் கிளை நிர்வாகிகளுக்கு

'தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு நெல்லை மாவட்ட சார்பில் குறைந்த பட்சம் ரூ. 1000 நிதி தருவதாக ஒப்புக்கொண்டு 23-1-54ல், நெல்லையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் நிதி தருவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் ஒவ்வொரு கிளைக் கழகச் சார்பிலும், நிதி அளிக்கவேண்டுமென வேண்டுகிறேன். தூத்துக்குடியில் மட்டும் தனியாக நிதி அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தோழர்களே! அண்ணாவின் அறிக்கையைப் பார்த்திருப்பீர்கள்; எனவே. அருள் கூர்ந்து நிதி தந்து, அன்றைய கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,'' என்று நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ச. வீரபாகு அறிவிக்கிறார்.

பொள்ளாச்சி தோழர்களுக்கு

20—12—53 மாலை 2 மணியளவில் தி. மு. கழக உறுப்பினர் தேர்தல் நடைபெறும். பொள்ளாச்சி வட்டத் தோழர்கள் (உறுப்பினர்கள்) இதனையே அழைப்பாக ஏற்று வருகை தர வேண்டுமாய் செயலாளர் அயமணி அறிவிக்கிறார்.

சென்னையில் தலைவர்களுக்கு தாய்மார்கள் வரவேற்பு

சென்னை, டிச. 18—

மெமோரியல் மண்டபத்தில், 20—12—53 ஞாயிறு காலை 8 மணிக்கு சிறை சென்று மீண்ட தலைவர்கள்: பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள்: இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோருக்கு திராவிடத் தாய்மார்கள் சார்பாக வரவேற்பும்—தூத்துக்குடி நிதி அளிப்பும் நடைபெறும்.

தாய்மார்கள் பெருந் திரளாக வருக! நன்கொடை ரூ. 1; அணா 8.

நிதி அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்புமாறு கன்வீனர் கேட்டுக்கொள்கிறார்:—

சத்தியவாணி முத்து, நெ. 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, சென்னை—1,

அலமேலு அப்பாதுரை, நெ. 13, அருணாசல ஆச்சாரி தெரு, சேப்பாக்கம், சென்னை.

தமிழ் ஆட்சிமொழி மாநாடு

20—12—53 ஞாயிறு மாலை 8 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் தோழர் ஆ. கசபதி தலைமையில் தமிழ் ஆட்சி மொழி மாநாடு நடைபெறும்.

தோழர் எஸ். சுயம்பிரகாசம் திறப்புரையும், தோழர் சோ. அமிர்தகணேசன் வரவேற்பு உரையும் நிகழ்த்துவர்.

மற்றும் தோழர்கள் பி. டி. ராசன், எஸ். எஸ். ராமசாமி, க. கோவிந்தசாமி முதலிய சட்டசபை உறுப்பினர்களும், தோழர் கே. ஏ. பி. விசுவநாதம், டாக்டர் தருமாம்பாள் ஆகியோரும் மாநாட்டில் பேசுவர்.

திருப்பூர் தி. மா. மு. கழக செயற்குழுக் கூட்டம்

மேற்படி கூட்டம் கழகக் கட்டிடத்தில் 19-12-53ஆம் நாள் சனிக்கிழமை நடைபெறும். அப்பொழுது வரவு—செலவு கணக்குகளைப் பற்றியும், தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது பற்றியும், கழகத்தின் முக்கிய வேலைத் திட்டங்களைப் பற்றியும், இப்பொழுது இருக்கும் செயலாளரை மாற்றல் பற்றியும் ஆலோசிக்கப்படும். ஆகவே, கஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி, சுப்பிரமணிய செட்டியார் உயர்நிலைப் பள்ளி, பிசப் உபகாரசாமி உயர்நிலைப்பள்ளி கழகத் தோழர்கள் காலை 10 மணிக்கு தவறாமல் வருகை தருமாறு அ. மதியழகனும், மல்லிகா அர்ச்சுனனும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

இராசமாணிக்கம் - கமலா திருமணம்

20-12-53 ஞாயிறு மாலை 4 மணியளவில் சென்னை ஆசாரப்பன் தெரு, அனுமந்தராயன் கோயில் சந்து 4-ம் எண் இல்லத்தில் தோழர் இராசமாணிக்கத்திற்கும், தோழியர் கமலாவிற்கும் திருமணம் நடைபெறும்.

மணவிழாவிற்குத் தோழர் ஆர். டி. அரசு தலைமை தாங்குவார். தோழர்கள் இளம்பரிதி, கோ. செங்குட்டுவன், தி. க. ராசபாதர் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசுவர்.

கம்யூனிஸ்டு உறவற்ற எதிர்ப்பு முன்னணி

—:X:—

சட்டசபை திராவிடக் கட்சி முயற்சி

சென்னை, டிச. 17—

சென்னை சட்டசபையில் புதிதாகத் தோன்றியுள்ள திராவிட பார்லிமெண்டரி கட்சியின் தலைவர் சுயம்பிரகாசம் இன்று பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் திராவிட பார்லிமெண்டரி கட்சியென்பது கட்சியின் பெயரேயன்றி திராவிட கழகத்திற்கும், அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. பிரதேசத்தைக் குறிக்கவே இப்பெயர் ஏற்பட்டதென்றார்.

மேலும் அவர் பேசுகையில், கம்யூனிஸ்டு அல்லாத எதிர்ப்பு முன்னணி அமைக்க அசெம்பிளியிலுள்ள பல்வேறு கட்சித் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தப்படுமென அவர் சொன்னார்.

திராவிட நாடு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைய ஏதுவாகலாம்.''

ஏற்க முடியாது!

பின்னர், தோழர் வி. ஆர். நாகராஜன் பேசியதாவது:—

"எஞ்சியுள்ள சென்னை மாநிலத்தில் செய்யவேண்டிய ஆக்க வேலைகள் அதிகமிருக்கின்றன. புதிய கல்வித் திட்டத்தை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை. அசெம்பிளி தீர்மானப்படி திட்டத்தை நிறுத்தி வைக்காதது வருந்தத் தக்கது. இப்போதுள்ள நிலையில் பாருலேகர் கமிட்டி சிபாரிசை நாங்கள் ஏற்கமுடியாது. தென்னாட்டில் அறிஞர்கள் இல்லையா? ஏன் அவர்களில் ஒருவரை கமிட்டியில் நியமிக்கக் கூடாது? இதிலிருந்து ஏதோ அந்தரங்கம் இருக்கிறது என்று மக்கள் நம்புவதில் என்ன தவறு?''

முன்னறிவிப்பு!

அடுத்து, தோழர் கே. ஆர். சம்பந்தம் பேசியதாவது:—

"சட்டசபை நடவடிக்கைகள் தமிழில் நடக்கவேண்டும். மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் இதற்கு அனுமதி பெற வேண்டும்.''

"இம்மாநிலத்தை எஞ்சிய மாநிலம் என்று கூறுவது வெட்கப்படக்கூடியது. இதை, 'திராவிடநாடு' அல்லது 'தமிழகம்' என்று அழைக்கப்பட வேண்டும். 'திராவிட நாடு' என்று அழைக்க சர்க்காருக்கு வருத்தமாக இருந்தால், 'தமிழ்நாடு' என்று அழைக்கலாம்.

"இந்த நாட்டின் மக்களுடைய சம்பளமும் ரூ. 1000-த்திற்கு மேல் இருக்கக்கூடாது. மாநிலம் குறுகியதால் அதிக மந்திரிகள் தேவையில்லை.''

கருப்பையா கொலை வழக்கு விசாரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் கூறியதாவது:-

"காக்காத் தோப்புத் தெருவில் நான் குடியிருந்து வருகிறேன்; கிருஷ்ணத் தேவர் கார் செட்டில் எனக்கு வேலை; சுமார் 2 மாதத்திற்கு முன்பு மாலை 6-30 மணிக்கு நான் கார் செட்டில் இருந்தேன்; அப்போது கந்தன், தங்கவேலு ஆகியோர் வெட்டுப்பட்டு ஓடி வந்தனர்; பாதுகாப்பிற்காகக் கப்புகளை எடுத்தோம்; அதற்குள்ளாக எதிரிகள் ஓடிவிட்டனர்; கருப்பையா காக்காத் தோப்புத் தெருவில் வெட்டப்பட்டுத் தண்ணீரில் கிடந்தார்; சிறிது நேரத்தில் போலீஸ் லாரி வந்தது; வெட்டப்பட்ட கருப்பையா, கந்தன், தங்கவேலு ஆகியோரை லாரியில் ஏற்றிக் கொண்டு சென்றனர்; இவர்கள் மூன்று பேர்களையும் யார் வெட்டினார்கள் என்று சொல்லமுடியாது; பின்பு என்னைப் போலீசார் விசாரித்தனர்''

சாட்சியை எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

7-வது சாட்சி

கருப்பையாவின் கடைக்கு அருகே ஹோமியோபதி டாக்டராக உள்ள சண்முகம் என்பவர் 7-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:-

"நான் மேலமாசி வீதியில் குடியிருந்து வருகிறேன்; 2 மாதத்திற்கு முன்பு கந்தன் தையல் கடை அருகே சத்தம் கேட்டது; அறையைத் திறந்து வெளியே வந்து பார்த்தேன்; கார் செட்டில் தங்கவேலு, கந்தன் ஆகியோர் இரத்தக் காயத்துடன் உட்கார்ந்திருந்தார்கள்; காக்காத் தோப்புத் தெருவில் கருப்பையா வெட்டப்பட்டுக் கிடந்தார்; அவருடைய உடல் பூராவும் வெட்டுக் காயம் பட்டிருந்தது; கந்தன் கடையில் தியாகராசன் என்ற சிறுவனைத் தவிர வேறு யாரும் இல்லை.

இவரையும் எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

8-வது சாட்சி

பின்னர் தல்லாகுளம் போலீஸ் திரு. எஸ். சேதுராமலிங்கம் சாட்சியமளித்தார்.

"கடந்த 11—10—53ந்-தேதி காலை வைத்தியசாலையில் கருப்பையாவின் பிரேத விசாரணை நடை பெற்றது; அப்போது அங்கே நான் வேலையில் இருந்தேன்.''

9-வது சாட்சி

கடைசியாக, 9-வது சாட்சி சுப்பையா சேர்வை விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் கூறியதாவது:-

"நான் சிற்றுண்டிச்சாலைகளுக்குப் பால் கொடுப்பதற்காக வெளியே சென்றேன்; திரும்பி வரும் சமயம் மாலை 7 மணி இருக்கும்; அப்போது காக்காத் தோப்புத் தெருவில் கருப்பையா வெட்டப்பட்டு தண்ணீரில் கிடந்தார்; 'ஏதோ கலகம் நடைபெற்றிருக்கிறது; வீட்டிற்குள் வந்துவிடு' என்று என் தாயார் அழைத்தார்கள்; சிறிது நேரத்தில் போலீஸ் லாரி வந்து வெட்டப்பட்டுக் கிடந்தவரை எடுத்துச் சென்றது; என்னை போலீசார் பின்பு விசாரணை செய்தார்கள்.

இந்த வழக்கு விசாரணையை இம்மாதம் 23-ந் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் அமைப்பாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் [illegible] தெரு, இராயபுரம்; [illegible] தெரு. ஆசிரியர்: இ. [illegible]